## பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரைப் போல்

# தமிழர்களின் நிரந்தரத் தலைவராகத் திகழ்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற முதல்வர் பிறந்த நாள் விழாவில் வி.ஐ.டி.வேந்தர் ஜி.விசுவநாதன் பேச்சு!

சென்னை, ஏப். 8-

**“பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரைப் போல் தமிழர்களின் நிரந்தரத் தலைவராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார்” என்று வி.ஐ.டி.வேந்தர் ஜி.விசுவநாதன் அவர்கள் சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவில் பேசியபோது கூறினார்.**

**இவ்விழாவில் வி.ஐ.டி. வேந்தர் ஜி.விசுவநாதன் பேசியதாவது:-**

சேகர்பாபு அவர்கள் 73 கூட்டங்களை ஏற்பாடு செய்திருக்கிறார் என்று இப்போது தான் பார்த்தேன். முதலில் அவருக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

**தளபதியின் பெருமையான வளர்ச்சி!**

நான் அரசியல் கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். ஆனாலும் நம்முடைய முதல்வரின் பிறந்தநாள் விழா என்பதனாலே, நான் வருவதற்கு ஒப்புக்கொண்டேன். அதுமட்டுமல்ல, நான்1958-ஆம் ஆண்டு அன்றைய குளித்தலை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் கலைஞர் அவர்களை அவருடைய வீட்டில் சென்று பார்த்தேன். என்னை அழைத்துச் சென்றவர், என்னுடைய நண்பர் முரசொலி செல்வம் அவர்கள். அவர் எனக்கு ஒரு வருடம் பின்பு படித்தவர். லயோலா கல்லூரி மாணவர்களாக நாங்கள்சென்று கலைஞரைப் பார்த்தோம். அதுமுதல் இதுவரை, 67 ஆண்டு காலமாகநம்முடையதளபதிஅவர்களின்வளர்ச்சியை பெருமையோடு பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

அவர், மாணவராக இருந்து - மாணவரணியில் இருந்து - இளைஞரணியில்இருந்து- சென்னை மேயராக வந்து - அமைச்சராக வந்து - துணை முதல்வராக வந்து, இன்றைக்கு முதல்வராக பொறுப்பேற்றிருக்கும் வரை, இந்த 67 ஆண்டுகாலமாக அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவருடைய குடும்பத்தோடு எனக்கு ஒரு நெருக்கமான தொடர்பு உண்டு.

**இந்தியாவிலேயே சிறந்த முதல்வர்!**

‘இந்தியா டுடே’ பத்திரிகை 2021-இல் ஒரு சர்வே நடத்தியது. அந்த சர்வேயில் இந்தியாவில் இருக்கும் 28 முதலமைச்சர்களையும் சொல்லி, அவர்களில் யார் சிறந்த முதலமைச்சர் என்று வாக்கெடுப்புமூலமாகஒரு சர்வே நடந்து, அதில் நம்முடைய ஸ்டாலின் அவர்கள் - தளபதி அவர்கள்தான் முதலிடத்தை பெற்றார் என்பதை நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். எனவே, அப்படிப்பட்ட ஒருவர்தான் நமக்கு முதல்வராக இருக்கிறார்.

கட்சிக்கு அப்பாற்பட்டு அவரை பாராட்டுவதா? இல்லையா? என்பதைப்பற்றி கூட நான் யோசித்தேன். பொதுவாகவே, அமைச்சராக - முதலமைச்சராக - நாடாளுமன்ற உறுப்பினராக - சட்டமன்ற உறுப்பினராக வருபவர்கள், ஒரு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவர்கள் எல்லோருக்கும் பொதுவானவர்களாக ஆகிவிடுகிறார்கள். காரணம், வேறுஎதிர் கட்சிக்கென்றுஎம்.பி.-யோ- எம்.எல்.ஏ.-வோ - அமைச்சரோ இருக்க முடியாது. ஓட்டு போட்டவர்கள் - ஓட்டு போடாதவர்கள் - இவரை எதிர்த்துப் பேசியவர்கள், அவர்களுக்கும் இவர் தான் அமைச்சர் - சட்டமன்ற உறுப்பினர் - நாடாளுமன்ற உறுப்பினர். அதை ஒரு முழுமையான மக்களாட்சியாக மாற்றுவதற்கு, அப்படிப்பட்ட எண்ணம் தேவை.

அறிஞர் அண்ணா அவர்கள்தான், முதன் முதலாக அரசியல் நாகரீகம் என்ற சொற்றொடரை தமிழுக்கு தந்தவர். அப்படிப்பட்ட அரசியல் நாகரீகத்தில், இந்தியாவில் முதல் இடத்தை தமிழ்நாடு பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதை இன்றைக்கு இருக்கும்நம்முடைய முதல்வர் அவர்கள் செய்து காட்ட வேண்டும் என்று விரும்புகிறேன்.

காரணம், மக்களாட்சியை இரண்டு விதமாக பிரிப்பார்கள். முழு மக்களாட்சி மற்றும் குறையுள்ள அல்லது அரை குறை மக்களாட்சி என்று சொல்வார்கள். முழுமக்களாட்சியில்உலகத்தில்25 நாடுகள் இருக்கின்றன. அரைகுறை மக்களாட்சியில் 50 நாடுகள் இருக்கின்றன. இரண்டாவது பட்டியலில் இந்தியா இருக்கிறது. அதற்கு பல்வேறு காரணங்கள். அதற்குள்நான் செல்ல விரும்பவில்லை. ஆனாலும், அவைகளில் இருந்து விடுபட்டு, நாம் முழு மக்களாட்சியாக வருவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி - தோழமைக் கட்சி என்று பாராமல், அத்தனை பேரும் ஒத்துழைத்தால் நாம் முழு மக்களாட்சியாக மாற முடியும்.

**மக்களுக்கான ஆட்சி!**

மக்களுக்கான ஆட்சியாக இருக்க வேண்டும். பொதுவாக, அரசியல் கட்சிகள் பல இடங்களில் மக்களை பின்னால் தள்ளிவிட்டு, கட்சிக்காரர்களை முதல் இடத்தில் வைப்பார்கள். ஆனால், வளர்ந்த மக்களாட்சியில் அவ்வாறு இருக்காது. அதில், ஆளுங்கட்சி - எதிர்க் கட்சி என்று எதுவும்பார்க்கமாட்டார்கள். ளஅ மக்களுக்கு எது தேவையோ? அதை செய்து முடிப்பார்கள். அப்படிப்பட்ட ஆட்சிகள் இன்றைக்கும் பல இடங்களில் இருக்கின்றன.

‘Nordic Countries’என்றுசொல்வார்கள். நார்வே, ஸ்வீடன், டென்மார்க், பின்லாந்து போன்ற நாடுகள்தான் முழு மக்களாட்சியாக முதலிடத்தில் இருப்பவை. முதல் 10 இடங்களில் இருப்பவை இவைகள்தான். அவர்கள் அதிலும் முதல் இடத்தில் இருக்கிறார்கள்; பொருளாதார ரீதியாகவும் முதலிடத்தில் இருக்கிறார்கள்; கல்வியிலும் முதலிடத்தில் இருக்கிறார்கள்; அதைத் தான் நாம் பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நாம் உலகத்தின் மொத்த உற்பத்தியை பார்க்கும்போது, ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. அமெரிக்கா - முதல் இடம், சீனா - இரண்டாம் இடம், ஜெர்மனி - மூன்றாம் இடம், ஜப்பான் - நான்காம்இடம் - நாம் - ஐந்தாம் இடத்தில்இருக்கிறோம். தனிநபர் வருமானத்தை வைத்துதான், ஒரு நாடு வளர்ந்திருக்கிறதா? இல்லையா? என்று கண்டுபிடிக்க வேண்டும். அந்த தனிநபர்வருமானத்தில்நமக்குஎன்னரேங்க் என்றால்,141. மொத்த வருமானத்தில் ஐந்தாம் இடத்தில் இருக்கிறோம் என்று மகிழ்ச்சி. ஆனால், தனி நபர் வருமானத்தில் 141-வது இடத்தில் இருக்கிறோம். நம்முடைய தனிநபர் வருமானம் 2,700 டாலர். இதுவளர்ந்த நாடுகளில் எல்லாம், 30 ஆயிரம் -40 ஆயிரம் டாலர்களாக இருக்கும். நம்மோடு போட்டி போடும் சீன நாடேஇப்போது13ஆயிரம் 14ஆயிரத்திற்கு சென்று விட்டார்கள்.

**நம்மோடு ஒப்பிடவே முடியாத மாநிலங்கள்!**

நம்முடையதமிழ்நாடு இந்தியாவில் இருக்கும் யாரோடு போட்டிப் போட வேண்டும் என்று பார்த்தோமானால், மொத்தஉற்பத்தியில் நமக்கு மேலே ஒரேஒரு மாநிலம் இருக்கிறது, மகாராஷ்டிரா - மராட்டிய மாநிலம். அது முதலிடத்தில் இருக்கிறது. தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் இருக்கிறது.

தனிநபர்வருமானம்என்று பார்த்தோமானால், தெலுங்கானா முதல் இடத்தில் இருக்கிறது. கர்நாடகா இரண்டாம் இடத்தில் இருக்கிறது. நாம் மூன்றாம் இடத்தில் இருக்கிறோம். மற்ற தென் மாநிலங்கள், ஆந்திராவும் - கேரளாவும் நமக்குப் பின்னால் இருக்கிறார்கள். அதனால், நம்மோடு ஒப்பிடவே முடியாத அளவிற்கு பல மாநிலங்கள் இருக்கிறது.



நமக்கு தனிநபர் வருமானம் கிட்டத்தட்ட3 லட்சம். பீகாரில் 60 ஆயிரம். உத்தரப்பிரதேசத்தில் 90 ஆயிரம். நாம் சென்று அவர்களுடனா போட்டி போட முடியும். நம்மை அவர்கள் போன்று ஆக்கிவிட வேண்டும் என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் அனைத்தையும் தாய் மொழியில் படியுங்கள் என்று சொல்வது, தாய் மொழி மீது இருக்கும் பற்றால் அல்ல. ஆங்கிலத்தை வைத்து, இந்தியை விடமாட்டேன் என்கிறார்கள். ஆங்கிலத்தை எடுத்துவிட்டால், இந்தி தானாக உள்ளே வந்துவிடும் என்று நினைக்கிறார்கள்.

அன்றைக்கே இதை அறிஞர் அண்ணா அவர்களுக்குஇராஜாஜி சொன்னார். இராஜாஜி அண்ணாவிடத்தில் பேசும்போது, “நீங்கள் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், தமிழை வைத்து இந்தியை தடுக்க முடியாது. ஆங்கிலத்தை வைத்துதான் இந்தியை தடுக்க முடியும்” என்று சொன்னார்.

அதில் இன்னொன்றையும் ராஜாஜி சொன்னார். “ஆங்கில அந்நிய மொழி என்று அவர்கள் சொல்வார்களானால், இந்தியும் நமக்கு அந்நியமொழிதான்” என்று சொன்னார். இன்றைக்கும் அதை சொல்கிறார்கள், ஆங்கிலம் அந்நிய மொழிஎன்று. ஆனால், 3, 4 மாநிலங்களில் மாநில மொழியே ஆங்கிலம் தான். அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து, மிசோரம், மேகாலயா ஆகிய மாநிலங்களில் மாநில மொழியே ஆங்கில மொழிதான். எனவே, அவர்களை எல்லாம் வெளிநாட்டில் சேர்த்து விட முடியுமா? இது தேவையே இல்லை.

**இருமொழிக் கொள்கையே நம் வழி!**

இந்த மும்மொழிக்கொள்கையில் நம்முடைய தளபதி ஸ்டாலின் அவர்கள் சரியான நிலையை எடுத்து, அண்ணா சொன்ன இருமொழிக்கொள்கைதான் நம்முடைய கொள்கையாக என்றைக்கும் இருக்கும் என்று சொல்லி இருக்கிறார்.

நான் அப்போது நாடாளுமன்றத்தில் இருந்தபோதுதான், இது சட்டமாக்கப்பட்டது. மும்மொழிக்கொள்கை, இந்திரா காந்தி காலத்தில் 1968-இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அப்போது அவர்கள் இந்தியாவை இரண்டாகப் பிரித்தார்கள். இந்தி மொழி பேசும் மாநிலமக்கள் - இந்தி மொழி பேசாத மாநிலமக்கள் என்று பிரித்து, இந்தி பேசாத மாநிலங்களில், மாநில மொழி - இந்தி - ஆங்கிலம் மூன்றும் படிக்க வேண்டும்; இந்தி பேசுகின்ற மாநிலங்களில், இந்தி - ஆங்கிலம் - ஏதாவது ஒரு தென்னிந்திய மொழியைப் படிக்க வேண்டும் என்பதுதான் அன்றைக்கு சட்டமாகநிறைவேற்றப்பட்டது.னரே

ஆனால், இந்தி பேசுகின்ற ஒன்பது மாநிலங்களில் ஒன்றில் கூட தமிழோ - தெலுங்கோ- கன்னடமோ - மலையாளமோ படித்ததில்லை; யாரும் கேட்கவும் இல்லை. இந்த இந்தி பேசாத மாநிலங்களில்தான், மும்மொழிக் கொள்கை என்று இருக்கிறது. இதை அவர்கள் யாரும் வற்புறுத்துவதாகவும் தெரியவில்லை. நான் தமிழ் படித்து விட்டேன். நீங்கள் ஏன் இந்தியை படிக்கவில்லை? என்று கேட்டாலாவது நியாயம் இருக்கிறது. அப்படி நிலைமையே இல்லை.

1976-இல் அதற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டது. அந்த விதிமுறைகளிலேயே, நம்முடையதமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**மாநிலங்களை அழைத்து பேசாத கமிட்டி!**

இன்றைக்கு சொல்லப்படுகின்ற இந்த புதிய தேசியகல்விக் கொள்கை பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றதல்ல. ரங்கராஜன் கமிட்டி என்ற ஒரு குழுவைப் போட்டார்கள். அந்தக் குழு ஒரு அறிக்கையை தயாரித்தது. அது மாநிலங்களை அழைத்துப் பேசவே இல்லை.

கல்விஎன்பது பொதுப் பட்டியலில் இருக்கிறது. ஒரு காலத்தில் கல்வி மாநிலப் பட்டியலில் இருந்தது. 1976-இல் அரசியல் சட்டம் திருத்தப்பட்டு, அது மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது. எனவே, அப்படி நடவடிக்கை எடுப்பதாக இருந்தால்- முடிவு செய்வதாக இருந்தால் - மாநிலத்தையும் கலந்துதான் ஒன்றிய அரசு முடிவு எடுக்க வேண்டும். அது செய்யப்படவே இல்லை. அப்படிப்பட்ட ஒரு குழுவாகத்தான், இந்த ரங்கராஜன் குழுவின் அறிக்கையை ஒன்றிய அரசின் அமைச்சரவை ஏற்றுக்கொண்டது. பாராளுமன்றத்துக்கு வரவே இல்லை. இப்போது கூட நான்நம்முடைய ஜெகத்ரட்சகன் அவர்களிடம் கேட்டேன். அது இன்னும்வரவே இல்லை என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒன்று, எப்படி நாட்டுக்கு சட்டமாக முடியும். அது ஒரு பக்கம்.

**நாட்டுக்கு பயன்படாது!**

இன்னொரு பக்கம், அவர்கள் இந்த மும்மொழிக்கொள்கையை கொண்டு வருவதே, இந்தியை எப்படியாவது கொண்டு வந்துவிட வேண்டும் என்று - புறக்கடை வழியாகவாவது கொண்டு வந்துவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். அது நாட்டுக்கு பயன்படாது.

இப்போது என்னுடைய வி.ஐ.டி.-இல் படித்த மாணவர்கள், 84 நாடுகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் நன்றாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் படித்தவர்கள். தாய் மொழி முக்கியம்தான். இந்தியில் படித்துவிட்டு எங்கு செல்வார்கள்?

இங்கே வந்து உள்துறை அமைச்சர் பேசுகிறார், ‘நீங்கள் பொறியியலை தமிழில் படியுங்கள். மருத்துவத்தை தமிழில் படியுங்கள். சட்டத்தை தமிழில் படியுங்கள்’ என்கிறார். அதை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விட்டுவிடுவோம். அவர்கள் எதில் படிக்கிறார்களோ, படிக்கட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை.

நீங்கள் அண்மையில் பார்த்திருப்பீர்கள். கடந்த இரண்டு மாதங்களில், ஒரு லட்சம் பேர் அரசுப் பள்ளிகளில் சேர்ந்திருக்கிறார்கள். அதில் 80 சதவிகிதம்பேர் ஆங்கிலத்தைதான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.ன எனவே, பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதுதான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது. அதுதான் அவர்களது எதிர்காலத்துக்கு அமைவதாக இருக்கும். தமிழுக்கு முக்கியத்துவம் தருவோம். தமிழ்படிக்காமல்ஒருவனும் பள்ளியை விட்டுவெளியேசெல்லக்கூடாது என்பதற்கு சட்டம் இயற்றலாம்.

நான் முதலமைச்சர்களுக்கு தெரிவித்துக் கொள்வது, இந்த மொழிக் கொள்கையில் உறுதியாக இருப்பதை நாட்டு மக்கள் முழுவதும் ஆதரிக்கிறார்கள். அதை யாரும் எதிர்த்துப் பேச முடியாது. அவ்வாறு பேசினால் அவர்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள். அது அவர்களுக்கும் தெரியும். ஆனாலும், அதற்காக கையெழுத்து வாங்குகிறேன் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**தமிழ்நாடு எல்லாவற்றிலும் முதலிடம்!**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, நாம் எல்லாவற்றிலும் முதலிடத்தை பெற வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். அதை இன்றைக்கு முழுமையாக செய்ய ஆரம்பித்திருக்கிறார் நம்முடைய தளபதி ஸ்டாலின் அவர்கள். அவர் அதில் வெற்றி பெற வேண்டும்.

விவசாயமாக இருந்தாலும்சரி- தொழில்துறையாக இருந்தாலும் சரி - கல்வித் துறையாக இருந்தாலும் சரி எல்லாவற்றிலும் வர வேண்டும். கல்வித்துறைக்கு முன்னுரிமை கொடுத்தால், நாம் எல்லாவற்றிலும் மேலே வந்து விடுவோம். அதைத்தான் இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இல்லம் தேடிக் கல்வி, காலை சிற்றுண்டி, பெண்களுக்கு புதுமைப்பெண் திட்டம், அனைத்துமே கல்வியை ஊக்குவிப்பதற்காகத்தான் இருக்கிறது. அதை முழுவதுமாக செய்து, தமிழ்நாடு மற்ற வளர்ந்த நாடுகளோடு போட்டி போடுகின்றது.

ஆங்கிலத்தில் ஜி.ஆர். என்று சொல்வோம், உயர் கல்வியை எவ்வளவு பேர் படித்து இருக்கிறார்கள் என்றால், Gross Enrollmentஎன்பதுஇந்தியாவில்28 சதவிகிதம்தான். வளர்ந்த நாடுகள் எல்லாம் 60சதவிகிதம்முதல் 100சதவிகிதம்வரைஇருக்கிறது. நாம் இவர்களோடு போட்டி போட முடியாது. வளர்ந்த நாடுகளோடு தமிழ்நாடு போட்டியிட வேண்டும். நாம் இப்போது கிட்டத்தட்ட 50சதவிகிதம்நெருங்கிக் கொண்டிருக்கிறோம். நாம் அமெரிக்காவோடு போட்டி போட வேண்டும், 88சதவிகிதம். ஆஸ்திரேலியாவும், தென்கொரியாவும் 100-க்கு 100 சதவிகிதம். அவர்களோடு போட்டி போட்டு நாம் அனைவருக்கும் உயர்கல்வியை, நம்முடைய குழந்தைகள் யாராக இருந்தாலும் அவர்கள் பள்ளியோடு நின்று விடாமல் உயர் கல்வியை கொடுக்க வேண்டும்.

**எல்லோரும் படிக்க வேண்டும் என்பதே முதல்வரின் இலக்கு!**

அதற்கு இப்போது நாங்கள் எங்களுடைய மாவட்டத்தில் - வட ஆற்காடு மாவட்டத்தில் அந்த முயற்சியை எடுத்து செய்து கொண்டிருக்கிறோம். ‘அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை’ என்றஒன்றை ஏற்படுத்தி, அதில் யாரும் 10-ஆம், 12-ஆம் வகுப்போடு நின்று விடாமல், எல்லோரும் படிக்க வேண்டும் என்று அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதுவரை பத்தாயிரம் பேருக்கு கொடுத்திருக்கிறோம். அதில் மூன்றில் இரண்டு பங்கு மாணவிகள். பெண்கள் படிக்க ஆரம்பித்து விட்டார்கள். பெண்கள் வளர்ந்தால் சமுதாயம் வளரும்; நாடும் வளரும். அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அனைத்துமாவட்டத்திலும் அதை செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதையும் செய்ய வேண்டும்.

நம்முடைய தளபதி ஸ்டாலின் அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகுந்த பாராட்டத்தக்கது. இதற்கு அடுத்த கட்டமாக ஏழை மக்களுக்கும் - நடுத்தர மக்களுக்கும், இலவசக் கல்வியை - உயர்க் கல்வி அளிப்போம் என்று சொல்லுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவர்கள் பல்லாண்டு காலம் வாழ வேண்டும். இந்தத் தேர்தல்களை எல்லாம் தாண்டி, அவர் வெற்றி பெற வேண்டும். தமிழர்களுக்கு அவர் நிரந்தரத் தலைவராக வரவேண்டும். கலைஞரைப் போல - அண்ணாவைப் போல அவரும் வர வேண்டும் என்று வாழ்த்துகளை தெரிவித்து, விடைபெறுகிறேன்.

இவ்வாறு வி.ஐ.டி. வேந்தர் ஜி.விசுவநாதன் பேசினார்.



திருக்கோவிலூர் நகர மன்ற உறுப்பினர் கோல்டு ரவியின் புதல்வர் திருமண விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன். கௌதமசிகாமணி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் , டி.என். முருகன், தயா. இளந்திரையன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு. தங்கம் , தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி. செல்வராஜ், ஒன்றிய செயலாளர் கல்பட்டு ராஜா, வி.ஜி.பிரபாகரன், நகரச் செயலாளர் கோபி கிருஷ்ணன் பேரூராட்சி மன்ற தலைவர் எஸ்.அன்பு, துணைத்தலைவர் குணா, கவுன்சிலர் சக்திவேல் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.


தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி